ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2494/12 - 2026 ජුනි මස 23 වැනි අඟහරුවාදා - 2026.06.23

2494/12 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு**

2024 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க இலங்கைத் தொலைத்தொடர்பு (திருத்தச்) சட்டம், 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கைத் தொலைத்தொடர்பு (திருத்தச்) சட்டம் ஆகியவற்றினால் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கைத் தொலைத்தொடர்பு சட்டத்தின் 17 ஆம் பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட முறைமை உரிமங்களை வழங்குதல், புதுப்பித்தல், உரிமையை மாற்றுதல், திருத்தம் செய்தல் மற்றும் இரத்து செய்தல் தொடர்பாக வழிகாட்டல்கள் மற்றும் நடைமுறைகள்.

எயார் வைஸ் மார்ஷல் **பந்துல ஹேரத்** (ஓய்வு),
பணிப்பாளர் நாயகம்
இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குகுழு,
276, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 08,
2026 யூன், 12.

1A - PG 7762- 28 (2026/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 17 ஆம் மற்றும் 18 ஆம் பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டதும் 2023 ஒற்றோபர் 25 ஆம் திதிய 2355/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான தொலைத்தெடர்பு முறைமைக்கு உரிமம் வழங்குதல், புதுப்பித்தல், உரிமை மாற்றம், திருத்தங்கள் மற்றும் இரத்துச் செய்தல் ஆகியவற்றிற்கான வழிகாட்டல்கள் மற்றும் நடைமுறைகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:-

1. அட்டவணை 1, பிரிவு அ இன் 2.1.22 ஆம் இலக்க விடயத்தைத் திருத்துதல்: வசதி அடிப்படையிலான செயற்படுத்துநர் (FBO) உரிமங்களை வழங்குதல் பின்வரும் விடயத்தை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தம் செய்யப்படுகின்றது;

   *" முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட S17-1-A விண்ணப்பப் படிவத்தை அனைத்து உரிய விபரங்களுடன் சமர்ப்பிக்கும் போது, விண்ணப்பதாரர் 300,000 ரூபா செயன்முறைப்படுத்தல் கட்டணத்தையும், அதனுடன் பொருந்தக்கூடிய வரிகளையும் "இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு" என்ற பெயருக்குச் செலுத்த வேண்டும். உரிமம் வழங்கும் செயல்பாட்டில் விண்ணப்பதாரர் தகுதி பெற்றாலும் இல்லாவிட்டாலும் இக்கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. உரிய செயன்முறைப்படுத்தல் கட்டணம் செலுத்தப்படாவிட்டால், எந்தவொரு விண்ணப்பமும் பரிசீலிக்கப்படமாட்டாது."*

2. அட்டவணை 1, பிரிவு ஆ இன் 2.6.22 ஆம் இலக்க வியடத்தைத் திருத்துதல்: சேவை அடிப்படையிலான செயற்படுத்துநர் (SBO) உரிமங்களை வழங்குதல் பின்வரும் விடயத்தை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தம் செய்யப்படுகின்றது;

   *" முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட S17-1-B விண்ணப்பப் படிவத்தை அனைத்து உரிய விபரங்களுடன் சமர்ப்பிக்கும் போது, விண்ணப்பதாரர் 300,000 ரூபா செயன்முறைப்படுத்தல் கட்டணத்தையும், அதனுடன் பொருந்தக்கூடிய வரிகளையும் "இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு" என்ற பெயருக்குச் செலுத்த வேண்டும். உரிமம் வழங்கும் செயல்பாட்டில் விண்ணப்பதாரர் தகுதி பெற்றாலும் இல்லாவிட்டாலும் இக்கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. உரிய செயன்முறைப்படுத்தல் கட்டணம் செலுத்தப்படாவிட்டால், எந்தவொரு விண்ணப்பமும் பரிசீலிக்கப்படமாட்டாது."*

3. அட்டவணை 2, பிரிவு அ இன் 3.1.3 ஆம் இலக்க வியடத்தைத் திருத்துதல்: வசதி அடிப்படையிலான செயற்படுத்துநர் (FBO) உரிமங்களை புதுப்பித்தல் பின்வரும் விடயத்தை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தம் செய்யப்படுகின்றது;

   *" முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட S17-2-A விண்ணப்பப் படிவத்தை அனைத்து உரிய விபரங்களுடன் சமர்ப்பிக்கும் போது, விண்ணப்பதாரர் 300,000 ரூபா செயன்முறைப்படுத்தல் கட்டணத்தையும், அதனுடன் பொருந்தக்கூடிய வரிகளையும் "இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு" என்ற பெயருக்குச் செலுத்த வேண்டும். உரிமம் புதுப்பித்தல் செயல்பாட்டில் விண்ணப்பதாரர் தகுதி பெற்றாலும் இல்லாவிட்டாலும் இக்கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. உரிய செயன்முறைப்படுத்தல் கட்டணம் செலுத்தப்படாவிட்டால், எந்தவொரு விண்ணப்பமும் பரிசீலிக்கப்படமாட்டாது."*

4. அட்டவணை 2, பிரிவு அ இன் 3.1.12 ஆம் இலக்க விடயத்தைத் திருத்துதல்: வசதி அடிப்படையிலான செயற்படுத்துநர் உரிமங்களை புதுப்பித்தல் பின்வரும் விடயத்தை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தம் செய்யப்படுகின்றது;

   *" செயற்படுத்துநர், தற்போதுள்ள உரிமம் காலாவதியாகும் திகதிக்கு முன்னதாக, அதற்கான கட்டண அறிவித்தல் வழங்கப்பட்டவுடன் பொருந்தக்கூடிய உரிமக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். தற்போதுள்ள உரிமம் காலாவதியான திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் உரிமக் கட்டணத்திற்கு. சட்டத்தின் 22 ஓ பிரிவின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள மிகைக்கட்டணம் விதிக்கப்படும்."*

5. அட்டவணை 2, பிரிவு ஆ இன் 3.3.3 ஆம் இலக்க விடயத்தைத் திருத்துதல்: சேவை அடிப்படையிலான செயற்படுத்துநர் உரிமங்களை புதுப்பித்தல் பின்வரும் விடயத்தை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தம் செய்யப்படுகின்றது;

   *"உரிய விபரங்களுடன் S17-2-B விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்கும் போது, விண்ணப்பதாரர் 300,000 ரூபா செயன்முறைப்படுத்தல் கட்டணத்தையும், அதனுடன் பொருந்தக்கூடிய வரிகளையும் "இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு" என்ற பெயருக்குச் செலுத்த வேண்டும். உரிமம் வழங்கும் செயல்பாட்டில் விண்ணப்பதாரர் தகுதி பெற்றாலும் இல்லாவிட்டாலும் இக்கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. உரிய செயன்முறைப்படுத்தல் கட்டணம் செலுத்தப்படாவிட்டால், எந்தவொரு விண்ணப்பமும் பரிசீலிக்கப்படமாட்டாது."*

6. அட்டவணை 2, பிரிவு ஆ இன் 3.3.11 ஆம் இலக்க விடயத்தைத் திருத்துதல்: சேவை அடிப்படையிலான செயற்படுத்துநர் உரிமங்களை புதுப்பித்தல் பின்வரும் விடயத்தை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தம் செய்யப்படுகின்றது;

*“ செயற்படுத்துநர், தற்போதுள்ள உரிமம் காலாவதியாகும் திகதிக்கு முன்னதாக, அதற்கான கட்டண அறிவித்தல் வழங்கப்பட்டவுடன் பொருந்தக்கூடிய உரிமக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். தற்போதுள்ள உரிமம் காலாவதியான திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் உரிமக் கட்டணத்திற்கு. சட்டத்தின் 22 ஓ பிரிவின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள மிகைக்கட்டணம் விதிக்கப்படும்.”*

7. அட்டவணை 1, பிரிவு ஆ இன், விண்ணப்பப் படிவத்தின் 2.3 ஆம் பிரிவின் கீழ் விண்ணப்ப சரிபார்ப்புப் பட்டியலின் விடய இல 1: வசதி அடிப்படையிலான செயற்படுத்துநருக்கான உரிமங்களை வழங்குதல் பின்வரும் விடயத்தை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தம் செய்யப்படுகின்றது;

*“ 1. அதனுடன் பொருந்தக்கூடிய வரிகளுடன் செலுத்தப்பட்ட, விண்ணப்ப செயன்முறைப்படுத்தல் கட்டண பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளதா? ஆம்/ இல்லை.”*

8. அட்டவணை 1, பிரிவு ஆ இன், விண்ணப்பப் படிவத்தின் 2.8 ஆம் பிரிவின் கீழ் விண்ணப்ப சரிபார்ப்புப் பட்டியலின் விடய இல 1: சேவை அடிப்படையிலான செயற்படுத்துநருக்கான உரிமங்களை வழங்குதல் பின்வரும் விடயத்தை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தம் செய்யப்படுகின்றது;

*“ 1. அதனுடன் பொருந்தக்கூடிய வரிகளுடன் செலுத்தப்பட்ட, விண்ணப்ப செயன்முறைப்படுத்தல் கட்டண பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளதா? ஆம்/ இல்லை.”*

ECG 06 - 0269

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது